இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்திற்கும் தேவை இருக்குமேயானால், அதனைப் பரிசீலனை செய்து, தேவைக்கேற்ப தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

**திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**94—**

## சொந்தக் கட்டடம்

***51209—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியில், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு ஆகிய இரண்டு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் செயல்படுகின்றன. ஸ்ரீவில்லிபுத்தூரில் செயல்படுகின்ற ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தின்கீழ் 156 மையங்களும், வத்திராயிருப்பில் செயல்படுகின்ற ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தின்கீழ் 102 மையங்களும் செயல்படுகின்றன. இந்த இரண்டு அலுவலகங்களுமே எந்தவிதமான அடிப்படை வசதிகளுமின்றி செயல்படுகின்றன. அதிலும் குறிப்பாக, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள அந்த அலுவலகம், போக்குவரத்து நெரிசல் வாய்ந்ததாகவும், எந்தவிதத்திலும் பயன்படாத வகையிலும் செயல்பட்டு வருகிறது. எனவே, ஸ்ரீவில்லிபுத்தூரில் செயல்பட்டு வருகின்ற ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்படி, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்தால் எந்தவிதமான நிதியொதுக்கீடும் செய்யப்படுவதில்லை. மாறாக, வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற அலுவலகங்களுக்கு வாடகையாக மாதத்திற்கு 3,500 ரூபாய் மட்டுமே நிதியொதுக்கீடு செய்யப்படுகிறது. அதனடிப்படையிலே, ஸ்ரீவில்லிபுதூரிலே இருக்கின்ற ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்கு 2,391 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டு, மாத வாடகையில் இயங்கி வருகிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்*

2015 மார்ச் 31]

வழிகாட்டுதலின்படி இந்த அரசு நடைபெறுகின்றது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கென்று சில அதிகாரங்கள் இருக்கின்றன. தனது விருப்புரிமையின் அடிப்படையிலே சில வேலைகளை எடுத்துச் செய்வதற்கு அவருக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அடிப்படையிலே, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியிலே இயங்குகின்ற ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு, ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

முற்பகல் 10-20

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஊட்டச்சத்து மையங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னால், அவற்றிற்கான வட்டார அலுவலகம் சிறப்பாக இருக்க வேண்டும். ஒவ்வொரு வட்டார மையத்தின்கீழும் நூற்றுக்கும் மேற்பட்ட குறு மையங்கள் செயல்படுகின்றன. அந்த குறு மையங்களிலே பணியாற்றுகின்ற பணியாளர்கள், அரசினுடைய பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும், பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உதவியாக இருக்கிறார்கள். அதுதொடர்பாக பல்வேறு கூட்டங்களையும் நடத்துகிறார்கள். அப்படி கூட்டங்களை நடத்துகின்றபோது அந்தப் பணியாளர்கள் கூட்டத்தை நடத்துவதற்கான இடம் அங்கு இருக்க வேண்டும். அதேபோல, வட்டார மையங்களில் மாவு, முட்டை போன்ற பொருட்களையெல்லாம் பாதுகாப்பாக வைப்பதற்குத் தேவையான இடவசதியும், அதேபோன்று, அந்த மையத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்கள், குறிப்பாக அந்தப் பணியாளர்கள் பெண்களாகவே இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்குத் தேவையான கழிப்பறை வசதி போன்ற பல்வேறு அடிப்படை வசதிகளோடு அந்த வட்டார மையங்கள் செயல்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். எங்களது பகுதியைப் பொறுத்தவரையில், அந்த மையங்களுக்குத் தேவையான இடவசதி இருக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த குழந்தைகள்தான் அந்த மையங்களில் பயில்கின்றார்கள்.

எனவே, தமிழக அரசே இதுபோன்ற மையங்களுக்குச் சொந்தமாக இடவசதியை உருவாக்கி, சிறப்பாகச் செயல்படுவதற்கான அனைத்து அடிப்படை வசதிகளோடு அந்த மையங்களைக் கட்டித் தர வேண்டும்.

அந்த மையங்களில் பணியாற்றுகின்ற வட்டார மையப் பொறுப்பாளர்களுக்கு எந்தவிதமான வாகன வசதியும் இல்லை. நூற்றுக்கும் மேற்பட்ட மையங்களைப் பரிசோதனை செய்வதற்காக ஆய்வுக்குச் செல்கின்றபோது வாகன வசதி இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, வாகன வசதியை உருவாக்கிக் கொடுத்து, மையங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடத்தில் ஆரம்பித்து வாகனத்தில் கொண்டு வந்து முடித்திருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். ஒரு கேள்விக்கு ஒன்பது கேள்விகளை இவர் எழுப்பியிருக்கின்றார்.*

*தமிழ்நாட்டில் 434 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் இருக்கின்றன. அதில், 230 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 204 கட்டடங்கள் வாடகை இல்லாமல் சொந்தக் கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன. முட்டைகளைக் கொண்டு வந்து மையங்களில் வைப்பது என்று சொல்வது தவறான தகவல். முட்டையைக் கொண்டு வந்து அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட்டு, அங்கிருந்து நேராக மையத்திற்கு* (Centre) *எடுத்துச் செல்லப்படும். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கோரிக்கை அலுவலகம். ஆனால், மையம்* (Centre) *என்பது குழந்தைகள் படிக்கக்கூடிய இடம்,* (centre). *வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து முட்டையை எடுத்துக்கொண்டுபோய் நேரடியாக மையத்திற்குத் தந்துவிடுகிறார்கள். சத்து மாவு வழங்கப்படும்போதும் அதேபோலத்தான் செய்கிறார்கள். அந்தந்தப் பகுதிகளில்*

2015 மார்ச் 31]

இருக்கக்கூடிய மாவட்ட திட்ட அலுவலர்கள் மூலமாக மையங்களுக்குப் போய்ச் சேர்க்கப்படுகிறது. இதுதான் நடைமுறையில் இருக்கின்ற பழக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே ஓர் அலுவலகம் தேவை என்று விரும்புகிறார். இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, கட்டடங்கள் கட்டுவதற்கு உரிய ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**95—**

**அரசு தொழில்நுட்பக் கல்லூரி**

***32018—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அருகில் ஆனைமலையிலுள்ள இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை நிலத்தில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அருகில் ஆனைமலையிலுள்ள இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை நிலத்தில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.